முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 789**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

26.11.2021, வெள்ளிக்கிழமை

1. சக்திமிகு ராஜனே அரங்கனே
சற்குருவாய் வாழுகின்ற தேசிகனே
பக்திபட உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
பாருலகில் வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் அரங்கன் தர்மமே உலகை வெல்லும்
அரங்கன் தரும் உபதேசமே இந்த உலகை மாற்றும்
பேசிட அரங்கன் தொடர்பு கூட்டி
புகலுவேன் தொடர் ஆசி பெறும் மக்களுக்கு
3. வகைபட பிரம்ம ஞான மகா சூட்சுமமோடு
வள்ளலே அரங்கன் என்கின்ற அதிசூட்சுமத்தை
சிந்தைபட ஆறுமுகன் யான் அரங்கன் வழி
சிறப்புடன் நடத்தி அருள்புரிவேன்
4. அருள்பட அரங்கன் தொடர்பு கூட்டி
அகிலத்தார் ஓங்காரக்குடில் தொடர்பை உயர்வாக தொடர்ந்து நடத்தி வந்தால்
வருகவே கலியுகத்தில் மாற்றம்
வடிவேலன் என் சக்தியாக உண்டாகும்
5. தருகின்ற அரங்கன் உபதேசமே
தரணிக்கு தர்மபலம் கூட்டி
யுகமாற்றம் செய்து அருளும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–